# நடப்பு நிகழ்வுகள் ஜனவரி 18.01.2018

- பிரெஞ்சு நாட்டின் மிக உயரிய கலாச்சார விருதான செவாலியே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளவர் ஐஸ்வர்யா டிப்னிஸ். இவர் இந்தியாவில் உள்ள பிரெஞ்சு கட்டடக் கலைகளை பாதுகாத்து வருகிறார். இச்சேவையை பாராட்டி இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- அண்மையில் காலமான N.K. திரிகா பத்திரிக்கைத் துறையை சேர்ந்தவர்
- ஒடிசா மாநிலம் நிகழாண்டின் கலை மற்றும் கலைஞர்களுக்கான 12 வது சர்வதேச திரைப்பட விழாவை நடத்தியுள்ளது.
- 3 வது ரெய்சினா பேச்சுவார்த்தை 2018 புது டெல்லியில் நடைபெற்றது. இது புவிசார் அறிவியல் மாநாடு ஆகும். இதனை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொடங்கி வைத்தார்.
- பேரிடர் நெகிழ் திறனுடைய உட்கட்டமைப்பு எனும் தலைப்பில் சர்வதேச புவி பயிற்சி அரங்கு மாநாடு புது டெல்லியில் நடைபெற்றது. இதனை ஐ.நா.வின் UNISDR & NDMA India வும் இணைந்து நடத்தியது.
- National Commedity and Derivatives Exchange (NCDEX) சந்தை கொத்தவரை விதைகளுக்கான இந்தியாவின் முதல் வேளாண் பண்ட மாற்று பங்கு வர்த்தகத்தை தொடங்கியுள்ளது.
- இந்திய மொழிகளின் நடுவெண் நிறுவனம் (Central Institute of Indian Languages - IIL) கர்நாடகத்தின் மைசூர் நகரில் அமைந்துள்ளது.
- கோவாவில் மத்திய அரசு சுகாதார திட்டத்தின் (CGHS) நலவாழ்வு மையத்தை ஸ்ரீபத் நாய்க் தொடங்கி வைத்தார்.
- ஸ்வச் ஆதாத் ஸ்வச் பாரத் பிரச்சாரத்துக்கான தூதுவராக கஜோல் நியமிக்கப்பட்டுள்ளார்.
- “வஜ்ர பிரகார் 2018 இந்திய அமெரிக்க கூட்டுப் படை ராணுவப் பயிற்சி அமெரிக்காவில் சியாட்டில் நடைபெறவுள்ளது.